## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## MCOP.No.304/2018

2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 08-ம் நாள் புதன்கிழமை **ம.சா.3**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) மொழிப்பெயர்ப்பாளர் திரு.எஸ்.சுரேஸ்குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாண்டி | **வட்டம்** | சிவகங்கை |
| **த.பெ** | கோதண்டம் | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | மதகுபட்டி | **வயது** | 49/2023 |

**முதல் விசாரணை:**

நான் மதகுபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு விபத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். கடந்த 10.03.2017ம் தேதி குற்ற எண்.54/2017ல் ராமலிங்கபுரம் விலக்கு அருகில் விபத்து நடந்ததாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா விபத்தில் மதகுபட்டியிலிருந்து கருப்பையா என்பவர் ஓட்டி வந்த டினஎன் 63 ஏஎச் 7889 ஸ்கார்பியோ காரும் சிவகங்கையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி சென்ற பஸ் டினஎன் 63 ஏஎஸ் 5699 ஆகிய இரண்டு வாகனமும் மோதியதில் ஸ்கார்ப்பியோ காரை ஓட்டி வந்த கருப்பையா என்பவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி விபத்து நடந்த நேரம் மதியம் 03.15 என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் அரசு தரப்பில் 25 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். விபத்தை நேரடி சாட்சியாக சரவணன் என்பவரும் ரகுநாத சிதம்பரம் என்பவரும் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் 9 பேரும் பஸ்ஸின் நடத்துனர் சின்னராஜா மற்றும் நேரடி சாட்சிகளும் பஸ்ஸின் டிரைவர் மணி என்பவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக உத்தேச வரைபடம் ஆய்வாளரால் தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த வரைபடம் விபத்து நடந்ததை பற்றி உத்தேசமாக வரையப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை பேருந்தின் ஓட்டுநர் மணி என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

குறற்ப்பத்திரிக்கை என்பது வழக்கு விசாரணை முடிவுற்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றப்பத்திரிக்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

**1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த விபத்தில் மொத்தம் 15 பேருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் 9 பேர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றார்கள் மற்றும் ஒருவர் இறந்துவிட்டார். பொதுவாக சம்பவத்தில் காயம்பட்டவரிடம் புகார் மனு பெறப்பட்டு அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கைப் பொறுத்து சம்பவத்தை நேரில் பார்க்காத விபத்தில் இறந்த கருப்பையா என்பவரின் மகன் கார்த்திக் என்பவரிடமிருந்து புகார் மனு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட 9 பயணிகள் சிவகங்கை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றார்கள் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திலிருந்து 3 1/2 கிலோமீட்டர் தூரத்தில் விபத்து ஏற்பட்ட இடம் உள்ளது. பொதுவாக ஒரு பெரிய வண்டியும் ஒரு சிறிய வண்டியும் மோதிக் கொண்டால் பெரிய வண்டியின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது வழக்கம் என்றால் சம்பவத்தைப் பொறுத்து தான் வழக்கு பதிவு செய்யப்படும். ஒரு விபத்தில் இறந்த நபர் மீது தவறு இருந்தாலும் அவர் மீது புகார் கொடுத்தாலும் வழக்கு தாக்கல் செய்வதில்லை என்று சொன்னால் சரியல்ல. பேருந்தின் நடத்துனர் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாக ஆவணத்தில் உள்ளது. விபத்து நடந்த இடத்திலிருந்து எங்கள் மதகுபட்டி காவல் நிலையத்தை தாண்டி தான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் பேருந்தின் ஓட்டுநரும் நடத்துனரும் மதகுபட்டி காவல் நிலையம் வந்து விபத்து குறித்து கார் ஓட்டுநர் மீது புகார் கொடுத்தும் அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் இறந்த கருப்பையாவின் மகனிடம் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் மதகுபட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்தேனா என்றால் இல்லை. விபத்து சம்பந்தப்பட்ட வாக்குமூலங்கள் சிவகங்கை நகர் காவல்

நிலைய ஆய்வாளர் (பொறுப்பு) சிவகங்கை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் வாங்கியுள்ளார். பொதுவாக, வாக்குமூலங்கள் ஒருவரிடம் வாங்கி அதை தொடர்ந்து மற்றவர்களுக்கும் அதே எழுதிக் கொள்வார்கள் என்றால் விசாரித்து பதிவு செய்வார்கள். என்னிடம் உள்ள ஆவணத்தில் சரத்குமார் வாக்குமூலத்தில் ஆய்வாளர் கையொப்பமிடவில்லை என்று சொன்னால் சரிதான், நீதிமன்றத்தில் உள்ள ஆவணத்தில் ஆய்வாளர் கையொப்பம் செய்திருப்பார். ஆனால் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு என்ன நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தப்பட்ட உத்தேச வரைபடத்தில் ரோட்டின் மையப்பகுதியில் வெள்ளைக் கோடு போடப்பட்டுள்ளது. விபத்து மையக் கோட்டில் தான் நடந்துள்ளதாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து காரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் விபத்தில் இறந்தவர் உள்ளூர்காரர் என்பதால் அவருக்கு சாதகமாக முதல் தகவல் அறிக்கை பேருந்தின் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை அனுமதியின் பேரில்:**

விபத்து சம்பந்தப்பட்ட உத்தேச வரைபடம் விபத்திற்கு பின்னீடு விபத்து பகுதியை கடந்த சிதறிக் கிடந்த பொருட்களை வைத்து தயார் செய்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த உத்தேச வரைபடத்தை மட்டும் வைத்து விபத்து இடத்தை துல்லியமாக சொல்ல முடியாது என்றால் சரிதான்.